**அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கம் - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பராயம்

அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1996 இன் 13 ஆம் இலக்க அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்க அதிகாரச்சட்டத்தினால் திருத்தப்பட்ட அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் கட்டளைச் சட்டத்தின் (283 ஆம் அதிகாரம்) 18 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அரசாங்க சேவை பரஸ்பர சேமலாபச் சங்கத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.
இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சங்கத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை

தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சங்கத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான ''சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட'' உள்ளகக் கணக்கீட்டு முறைமையொன்று சங்கத்தினால் பேணப்படல் அவசியமானது ஆகும். பொதுப் பேரேடு, நாளேடுகள், நாளேட்டுக் குறிப்புகள், பொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் போன்ற பிரதான கணக்கீட்டுக் குறிப்புகளை பேணுவதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள் பின்வரும் தலைப்புகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சங்கத்திற்கு கிடைத்திருந்த வகைப்படுத்தப்படாத அனுப்பல்களின் கூட்டுத் தொகையானது ரூபா 3,071,058 ஆக இருந்ததுடன் அது உரிய முறையில் இனங்காணப்பட்டு கணக்கு வைப்பதற்கு பதிலாக நடைமுறைப் பொறுப்பாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக இந்த மீதி ரூபா 1,111,946 அல்லது 57 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | நானாவித வருமானம் மற்றும் பெறுவனவுகள் உரிய முறையில் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டியமை. |

### 1.6 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அங்கத்துவம் இரத்தாகியுள்ள அங்கத்தவர்களின் பங்களிப்பு பணக்கணக்கினை தீர்ப்பனவு செய்யப்படாதிருந்ததுடன் அதில் உள்ள ரூபா 15,328,125 ஆன செலவு மீதி உரிய முறையில் இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த மீதிகளிலேயே ரூபா 2,167,861 கூட்டுத் தொகையான 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டவாறு உள்ளன. | துரிதமாக தீர்ப்பனவு செய்வதற்குநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1891 இன் 05 ஆம் இலக்க அரசாங்க சேவை பரஸ்பர சேமலாப சங்க சட்டத்தின் 16(1), (2) மற்றும் (3) ஆம் பிரிவுகள் | சங்கத்தில் 133, 134 மற்றும் 135 ஆம் வருடாந்த பொதுக் கூட்டங்களின் போது அங்கீகரிக்கப்பட்ட விதிகளிலான திருத்தங்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | விதிகளிலான திருத்தங்களை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டியமை. |
| (ஆ) | அரசாங்க சேவை பரஸ்பர சேமலாப சங்கத்தின் திருத்திய அதிகாரச்சட்டம் | | | |
| (i) | I அத்தியாயத்தின் (1)(10) ஆம் பிரிவு | அங்கத்தவரொருவரின் மரணம் அறிவிக்கப்பட்டு இரண்டு மாதங்களினுள் அவருக்குரிய அளிப்புக்களை செலுத்த வேண்டிய போதிலும், மரணமடைந்த அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 6,215,000 ஆன மரண அளிப்பு பணம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | அளிப்புக்களுக்கு உரித்துரையவர்கள் உரிய ஆவணங்களின்மூலப் பிரதிகள் மற்றும் பணத்தினை பெற்றுக் கொண்டமைக்கு உரிய பற்றுச்சீட்டுக்கள ஆகியவற்றை சமர்ப்பிக்காமையால் கொடுப்பனவு தாமதமாகியுள்ளது என்பதுவும் அவ்வாறான நபர்களுக்கு அறிவிக்கும் பணிகள் முன்னெடுக்கப் படுகின்றமையும் | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டியமை. |
| (ii) | I ஆம் அத்தியாயத்தின் 7(ஆ)(i) ஆம் பிரிவு | 6 கடன் தவணைகளை விட அதிகமான நிலுவையுடைய 15 அங்கத்தவர்களுக்காக சட்ட ரீதியான முறையில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. | நிலுவைப் பணத்துடன் மீண்டும் தவணைப் பணத்தை அறவிடுவதற்கு அல்லது கடனை அறவிட்டதன் பின்னர் அங்கத்துவத்தினை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவு | சங்கத்தினால் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டியமை. |
| (ஈ) | 2014 பெப்ரவரி 14 ஆந் திகதிய 2014/1 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கை | சங்கத்தினால் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 67,102,229 ஆன இலாபமாக இருந்ததுடன் அதனோடொத்த கடந்த வருடத்தின் இலாபம் 56,626,660 ஆகும். அதன் பிரகாரம் நிதிப்பெறுபேறுகளில் ரூபா 10,475,569 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு கடன் வழங்கியதன் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வட்டி வருமானம் ரூபா 11,237,159 இனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சங்கத்தின் 135 ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தின் உத்தியோகபூர்வ முன்மொழிவு 1 கீழ் சங்கம்நடாத்திச் செல்லப்படும் கட்டிடத்திற்கு பதிலாக அந்த காணியில் 4 மாடிகளைக் கொண்ட புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்குரிய சாத்தியவள கற்கையொன்றினை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள்அது நடைமுறைப்படுத்தப்பட வில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | சாத்திய வள கற்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என்பது | பொதுச் சபைக் கூட்டத்தின் உத்தியோகபூர்வ முன்மொழிவுகளை துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 மார்ச் 28 ஆந் திகதிய இடம்பெற்ற மாதாந்த குழுக் கூட்டத்தின் போது வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் அடிப்படையில் ஆதனக் கடன் எல்லை ரூபா 10 இலட்சத்திலிருந்து ரூபா 12 இலட்சம் வரை அதிகரிதிதிருந்த போதிலும், அதற்காக சங்கத்தின் விதிகளின் பிரகாரம் திறைசேரியின் பிரதி செயலாளரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப் பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. மேலும், கொடுப்பனவுகளை புறக்கணித்துள்ள அங்கத்தவர்களுக்கு தொலைபேசிகள் மூலம் குறுந்தகவல்களை அனுப்பி அவற்றை அறிவிப்பதற்காக 2019 மே மாதம் 29 ஆந் திகதி இடம்பெற்ற கூட்டத்தின் போது எடுக்கப்பட்டிருந்த தீர்மானம் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பதுடன் சங்கத்திற்கு புதிய கட்டிடமொன்றினை நிர்மாணிப்பதற்காக தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவகத்தின் அறிக்கையொன்றினை பெற்றுக் கொள்வதற்காக 2019 ஒக்தோபர் மாதம் குழுக் கூட்டத்தின்போது எடுக்கப்பட்டிருந்த தீர்மானம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கடன் எல்லையானது முகாமைத்துவக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் திருத்தப்பட்டுள்ளது. கொடுப்பனவுகளை புறக்கணிக்கும் அங்கத்தவர்கள் இனங்காணப்பட்டு அவர்களிடமிருந்து பணத்தை அறவிடுவதற்கு தனியானதொரு அலகொன்றினை நிறுவி அதற்காக தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளமை. | குழுவின் தீர்மானத்தை ஆக்கபூர்வதாக செயற்படுத்த வேண்டியமை மற்றும் தேவையான சந்தர்ப்பங்ளில் திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் போது சங்கத்தின் அங்கத்துவத்தினை பெற்றுக் கொண்ட 18 அங்கத்தவர்கள் மீளாய்வாண்டின் போது மற்றும் கடந்த வருடங்களில் ரூபா 3,010,058 கூட்டுத்தொகையான கடனைப் பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அவற்றின் எந்தக் கடன் தவணையும் அறவிடப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | அதுவரையிலும் மூவரிடம் பணம் அறவிடப் படுகின்றமையும் மற்றையவர்களிடம் பணத்தினை அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும். | கடன் பணத்தை அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள ஆதனக் கடன்கள் தொடர்பில் கணனி கட்டமைப்பின் மூலம் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது மீளாய்வாண்டின் இறுதித் திகதியிலுள்ளவாறு ரூபா 10,100,701 ஆன ஆதனக்கடன் மீதியொன்று நிலவிய 10 அங்கத்தவர்களினர் கடன் செலுத்தல் புறக்கணிக்கப்பட்டள்ளமை அவதானிக்கப்பட்டது. | சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுப்பதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளமை. | அறவிடும் நடைமுறை துரிதமாக செயற்படுத்தி கடன் மீதியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (இ) | கடந்த 5 வருடங்களினுள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டங்களுக்கு அங்கத்தவர்களின் பங்குபற்றலானது மொத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் சுமார் 11 சதவீதம் முதல் 13 சதவீதத்திற்கு இடைப்பட்டதாக காணப்பட்டது. இதன் காரணமாக சங்கத்தின் கட்டுப்பாட்டு சபைக்கு பொருத்தமான அங்கத்தவர்களை தெரிவு செய்தலைப் போன்றே சங்கத்தின் அபிவிருத்திக்கான தீர்மானங்களை எடுப்பதில் குறைந்தளவான அங்கத்தவர்களின் பிரதிநிதித்துவம் இடம்பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வருடாந்த பொதுக் கூட்ட தினம் வருடாந்த அறிக்கையுடன் அறிவித்தல், பத்திரிகைகளை குறித்த திகதியினை பிரசுரித்தல் மற்றும் குறுந்தகவல்கள் மூலம் அறிவித்தல் வழங்கப்படுகின்றமை. | அங்கத்தவர்களின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அவ்வாறே சங்கத்தினால் நடாத்தப்படும் மாதாந்த கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டங்களில் மற்றும் விசேட நிர்வாகக் குழுக் கூட்டங்களுக்காக பொதுத் திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்தும் இரு அங்கத்தவர்கள் பெயரிடப்பட்டிருந்த போதிலும், குறித்த கூட்டங்களுக்காக அவர்களின் பங்குபற்றலானது மிகவும் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்டிருந்த 23 கூட்டத் தடவைகளில் ஒரு அங்கத்தவர் 17 கூட்டங்களுக்கு பங்குபற்றியிருக்கவில்லை. | கூட்டங்கள் நடாத்தப்படும் திகதிகள் உரிய முறையில் அறிவிக்கப்பட்டது என்பதும் எதிர்காலத்தில் இந்த நிலைமையை குறைப்பதற்கு உரிய அறிவித்தல்கள் மேற்கொள்ளப்படும் என்பது. | அங்கத்தவர்களின் பங்குபற்றலினை அதிகரிப்பதற்குஉரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்த பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 2,500,000 ஆன உருப்படியின் கொள்வனவானது மீளாய்வாண்டின் போது இடம்பெற்றிராததுடன் பெறுகைகள் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 356,649 பெறுமதியான 05 உருப்படிகளுக்காக மீளாய்வாண்டில் பெறுகைப் பணிகள் இடம்பெற்றிருந்தன. அதன் பிரகாரம் சங்கத்தினால் மீளாய்வாண்டின் பெறுகைப் பணிகள் உரிய திட்டத்தின்பிரகாரம் இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | அவசர தேவைப்பாட்டின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டிருந்தது. | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | அரச சேவைகள் பரஸ்பர சேமலாப சங்கத்தின் கட்டுக்களியாவில் உள்ள சுற்றுலா விடுதிக்கு ரூபா 287,860 செலவிடப்பட்டு CCTV கெமரா கட்டமைப் பொன்று பொருத்தப் பட்டிருந்தது. அதற்குரிய | பெறுகை நடவடிக்கைகள் முகாமைத்துவச் சபை தீர்மானங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள் ளமை. | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| விலைக் கேள்வி ஆவணங் களுக்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் அறிவுரைகளின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரைகள் மற்றும் பெறுகைகள் குழுவின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளமை ஆவணங்களின் பிரகாரம் உறுதிப்படுத்தப்படவில்லை. | | |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சங்கத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியொன்று இல்லாதிருந்ததுடன் உள்ளபடியான பதவியணி 31 ஆகும். 2017 பெப்ரவரி 13 ஆந் திகதி முதல் வெற்றிடமாக காணப்படும் சங்கத்தின் செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிகளுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவரும் ஆட்சேர்க்கப்பட்டிருக்க வில்லை. | செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிகளை நிரப்பு வதற்காக பல சந்தர்ப்பங்களில் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும், பொருத்தமான விண்ணப்பதாரியொருவர் முன் சந்திருக்கவில்லை என்பது | உரிய முறையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு உரிய பதவிக்கு துரிதமாக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்ப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சங்கத்தினால் 2019 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் 62 விடயங்களின் பாதிடப்பட்ட பெறுமதிகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் ஆகியவற்றுக்கிடையே 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான விலகல்கள் நிலவின. அதன் பிரகாரம் பாதீடானது ஆக்கபூர்வமான நிதி கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | எதிர்வரும் வருடங்களின் போது விலகல்களை கூடியளவு குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பாதீடானது ஆக்கபூர்வமாக நிதிக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |